இருக்கிற, மனிதாபிமானத்தின் தலைவியாக இருக்கிற தலைவி, நான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாரி வழங்கியிருக்கிறார்.

முற்பகல் 10-05

அத்தகைய தாயுள்ளத்தின் தலைவியாக, இந்த நாட்டில் செங்கோல் ஓச்சுகிற நேரத்தில் இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த நண்பர்களும் சரி, அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களும் சரி பேணிக் காக்கப்படுவார்கள். நெசவாளர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்ற உறுதியினை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ரம்சான் தள்ளுபடி 5 நாட்களுக்குத் தரப்படும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் தரப்படும் என்று தான் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் தருவதுபோல 5 நாட்களுக்குத் தள்ளுபடி தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

4. ஒழுங்குப் பிரச்சினை.

காங்கிரஸ் கட்சிச் சின்னத்தில் வெற்றி பெற்ற இந்திய ஐக்கியப் பொதுவுடமைக் கட்சி உறுப்பினர் காங்கிரஸ் கட்சி கொறடாவின் அனுமதியின்றிப் பேசுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993–94 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி நேற்றைய தொடர்ச்சியாக திரு. எஸ்.வி. சண்முகம் (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வி. சண்முகம் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் சின்னமான கைச் சின்னத்தில் நின்று போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் உங்கள் கட்சிக்கு உட்பட்டது. இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன? அதைச் சொல்லுங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி கொறடாவின் அனுமதி பெறாமல் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் இந்த அவையிலே அவரைப் பேச அனுமதிப்பது, கட்சிக் கட்டுப்பாட்டை மீறுகின்ற திரு. சண்முகம் அவர்களுக்குத் தாங்களே ஊக்கம் கொடுப்பதாகக் கருதி எங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே எங்கள் கூட்டணிக் கட்சி வேட்பாளராக மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன், குடியரசுக் கட்சியின் வேட்பாளராகவும், திரு. நா. சா. பழனிசாமி அவர்கள் உழவர் உழைப்பாளர் கட்சி வேட்பாளராகவும், திரு. ஆண்டித்தேவர் அவர்கள் பார்வர்டு பிளாக் கட்சியின் வேட்பாளராகவும் எங்கள் இரட்டை இலைச் சின்னத்தில்தான் போட்டியிட்டு வெற்றி பெற்றார்கள். அவர்கள் இந்த அவைக்கு வந்த பின்னர், அவர்கள் தனிக் கட்சிப் பிரதிநிதிகளாகவே கருதப்பட்டு, ஒவ்வொரு விவாதத்திலும், ஒவ்வொரு மானியக் கோரிக்கையின் மீதும் தங்களால் பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இரட்டை இலைச் சின்னத்தில் நின்று வெற்றி பெற்றார்கள் என்பதற்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொறடா அவர்களின் அனுமதியைப் பெற்று அவர்கள் பேசவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய ஒரு அவசியம் இருப்பதாக நாங்களும் கருதவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும் கருதவில்லை. அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வி. சண்முகம் அவர்கள் கைச் சின்னத்தில் நின்று கூட்டணிக் கட்சி வேட்பாளராக வெற்றி பெற்றிருக்கிறார். அவர் இந்திய ஐக்கிய பொதுவுடமைக் கட்சியின் வேட்பாளராகத் தேர்தலில் நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றிருக்கிறார். அவர் இந்த அவைக்கு வந்த பிறகு கடந்த 21 மாத காலமாக இந்த அவையில் நடைபெற்ற அத்தனை சட்டமன்றக் கூட்டத் தொடர்களிலும். ஒவ்வொரு விவாதத்திலும், ஒவ்வொரு மானியக் கோரிக்கையின் மீதும் பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார். நான் ஏற்கெனவே குறிப்பிட்ட மற்ற தனிக் கட்சிப்பிரதிநிதிகளைப் போலவே அவரும் ஒரு தனிக்கட்சிப் பிரதிநிதியாகவே கருதப்பட்டு, இங்கே பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுதெல்லாம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இதற்கு எந்தவித ஆட்சேபணையையும் தெரிவிக்கவில்லை.

1993 மார்ச் 19]

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

ஆனால் இப்போது மட்டும் அவருக்குகாங்கிரஸ் கட்சிக் கொறடா வின் அனுமதி தேவை என்கிறார்கள். இதில் என்ன நியாயம் இருக்கிறது என்றுதான் நான் கேட்க விரும்புகின்றேன்

அதுமட்டுமல்லாமல், இந்திய ஐக்கியப் பொதுவுடமைக் கட்சியே திரு. எஸ். வி. சண்முகம் அவர்களைக் கட்சியை விட்டு நீக்கி விட்டதாக ஏற்கெனவே வெளிப்படையாக அறிவித்து விட்டார்கள். இந்த அறிவிப்பு எல்லாப் பத்திரிகைகளிலும் வெளி வந்து இருக்கிறது. எனவே, இந்த அவையைப் பொறுத்த வரை அவர் ஒரு Unattached Member என்றுதான் கருதப்பட வேண்டுமென்று தங்களுக்குப் பணிவோடு என்னுடைய கருத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல இதுவரையில் 21 மாத காலமாக கட்சித் தலைவர்களுக்கு நான் என்னுடைய disc etionary powers ஐப் பயன்படுத்தித்தான் வாய்ப்பு அளித்து வந்திருக்கிறேன். அதைப் போலவே, திரு. எஸ். வி. சண்முகம் அவர்களுக்கும் வாய்ப்பு அளித்து வந்திருக்கிறேன். அவர் இந்த அவையிலே பேசுகிறபோதும் கூட, காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன் என்று என்றைக்கும் சொன்னது கிடையாது. ஐக்கியப் பொதுவுடமைக் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன் என்றுதான் அவர் சொல்லி வந்திருக்கிறார். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களே அவர் பேசிய கூற்றைப்பற்றி இங்கே குறிப்பிடு கிறபோது ஐக்கியப் பொதுவுடமைக் கட்சியின் உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல என்றே இங்கு பலரும் பேசியிருக்கின்றார்கள்.

முற் பகல் 10–10

இதுவரையிலேயும் நான் எந்த முறையில் அவரைப் பேச அனு மதித்து வந்தேனோ அதே முறையிலேதான் இன்றைக்கும் நான் பேச அனுமதித்திருக்கிறேன். இதுவரையிலேயும் நான் காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா கொடுத்த லிஸ்டிலிருந்து அவரைப் பேச அனுமதித்து வந்திருப்பேனேயானால் இதற்கு மட்டும் எப்படி மாறுபடுகிறீர்கள் என்று நீங்கள் என்னைக் கேட்டாலும் நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமையிலேயிருந்து ஒரு பதிலைச்சொல்லவேண்டும். எப்படித் தலைவர் அவர்கள் தான் உறுப்பினர்களைப் பேச அனுமதிக்க வேண்டுமென்கிற ஒரு முறை இருக்கிறபோது, எந்தெந்த முறையிலே அவர்களைப்பேச அனுமதிக்கலாம் என்பதற்கே கூட சில வரைமுறைகள் இந்தியப் பாராளுமன்ற, சட்டமன்றங்களில் பின்பற்றப்பட்டு வரக்கூடிய

கௌல் அண்டு ஷக்தர் அவர்களுடைய 'PRACTICE AND PROCEDURE OF PARLIAMENT' என்கிற புத்தகத்திலே தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது, 'How Members are called upon to speak,' என்பதற்குச் சில வரன் முறைகள் சொல்லப் பட்டிருக்கின்றன—

'A Member who desires to take part in a debate or discussion in the House may adopt any one of the following three methods: He may have his name communicated to the Speaker through the paralimentary party or Group to which he belongs' இது ஒன்று நீங்கள் இப்பொழுது கிளப்பியிருக்கிறது. இரண்டு, 'He may prefer to wrlte direct to the Speaker without havlng to go through the machinery of Parliamentary party or Group.'

மாண்புமிகு டாக்டர் ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, In 'PRACTICE AND PROCEDURE OF PARLIAMENT' third Edition, by M.N. Kaul and S.L. Shakdher. மேலும் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் 'List of Spokesmen are supplied by whips of the parliamentary party and Groups to enable the Speaker to select members so as to ensure a well regulated and balanced debate. He is, however, not bound by such lists. (Thumping of desks) The list prepared by the Secretariate for the guidance of the Speaker on the basis of the lists supplied by whips and request received direct from Members can be changed or altered by the speaker. Request from members received direct or through parties are for the guidance of the speaker and cannot be read out to the House,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து வேண்டாம், திரு. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் எங்கள் தோழமைக் கட்சியைப் பிரித்து விட்டோம் என்று. அவர் ஜெயித்தது, எங்களுடைய கட்சிச் சின்னத்திலே ஜெயித்து இருக்கிறார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி அவர்கள்தான் அவர்களுக்கு சின்னம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறாகள். அவர்கள்தான் முடிவு எடுக்க வேண்டும், அந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே. நீங்கள் தமிழகத் தினுடைய முதல்வர், கட்சியினுடைய செயலாளர் என்ற முறை யில் செய்திருக்கிறீர்கள். எங்களது கட்சி அதைச் செய்யவில்லை. எங்கள் கட்சித்தலைமைதான் முடிவு எடுக்க வேண்டுமே தவிர டெசிஷன் பவர் எங்களிடம் இல்லை. அப்படி செய்யக்

TRUTH ALONE TRIUMPHS

கூடாது என்று எங்களுடைய கட்சித் தலைவர் வாழப்பாடி அவர்களே நேரிடையாக சொல்லியிருக்கிறார்கள். பேரவைத் தலைவரிடம் ஓரிரு வினாக்கள் கேட்க இருக்கிறேன் என்று சண்முகம் என்னிடம் கேட்பார்கள். அப்பொழுது எங்களுடைய சண்முகத்தை பேசவிடுங்கள் என்று சொல்வேன் விடுகிறேன் என்று தலைவர் சொல்வார். இப்படிப் பேசுவது வழக்கம். இதுவரை கேட்காமலேயே செய்யவில்லை, கேட்டிருக்கிறார்கள், ஒவ்வொரு தடவையும். இப்போதுதான் முதல் முறையாக கேட்காமலேயே நீங்கள் பேச விட்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களிடத்திலே தெரிவிக்கிற கருத்துக்கள், இன்று சண்முகம் பேசுகிறார் என்று சொன்னேனே தவிர வேறல்ல—அது நான் எடுத்த முடிவு-அதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். இன்னின்னார் பேசுகிறார்கள் என்பதைப் போல சண்முகம் இன்று பேசுகிறார், நீங்கள் கொடுத்து நான் அவரைப் பேச அனுமதிக்கிறேன் என்று சொல்வது எந்த வகையிலே பொருந்தும்? சில நேரங்களில் 5 உறுப்பினர்கள் கொடுப்பார்கள், அதிலே 3 உறுப்பினர்களை நான் பேச அனுமதித்திருக்கிறேன் என்று சொல்கிறேன். அதே போல, தமிழரசன் இன்று பேசுகிறார், பழனிசாமி பேசுகிறார் என்ற தகவல்களை உங்களுக்குத் தெரிவிப்பது என்பது, இன்னின்னார்கள் பேசுகிறார்கள் என்று சொன்னால் அதற்கேற்ப மற்றவர்களுடைய லிஸ்ட் கொடுக்கவேண்டும் என்பதற்காக நான் சொல்கிற கருத்தே தவிர உங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் அதைச் செய்தேன் என்று நீங்கள் கருதுவது தவறு. அதே போல நேற்றையதினமும் உங்களுக்குத் தெரிவித்தேன் இன்று சண்முகம் பேசுகிறார் என்று.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்தில் கூட்டணிக் கட்சிகளைச் சேர்த்துக்கொண்டு பின்னால் அவர்கள் வெற்றி பெற்ற பிறகு தனிக் கட்சியாகச் செயல்பட அனுமதிக்கிற பெருந்தன்மை எங்களுக்கு இருக்கிறது. அந்தப் பெருந்தன்மை காங்கிரசுக்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்களே இங்கே ஒப்புக்கொண்டு விட்டார். இருப்பினும் அது பிரச்சினை அல்ல. எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் தான் பேச வேண்டுமென்று பேரவைத் தலைவரிடம் கோரிக்கை வைக்கலாம். பேரவைத் தலைவரும் அதை அனுமதிக்கலாம்.

முற்பகல் 10–15

எனவே, யாரும் ஒரு உறுப்பினர் பேசுவதைத் தடை செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது ஒரு கன்வென்ஷன்பற்றி. மாண்புமிகு முதல்வர் அவர்கள் படித்ததை நான் படித்துப் பார்த்தேன். (குறுக்கீடுகள்) ஆனால், பிரச்சினை என்னவென்றால் கன்வென்ஷனலாக விப்ஸ் கொடுத்துதான் பேசுவது வழக்கம். இந்த ஹவுஸி-லே உங்களுக்கு உரிமை இருக்கிறது, இல்லை என்று சொல்லவில்லை. யாரையும் அழைக்கலாம், அழைக்காமலும் இருக்கலாம். அதை இல்லை என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விப்ஸ் கொடுத்துப் பேச அனுமதிப்பதும் கூட கன்வென்ஷன்தான், அந்தக் கட்சியைப் பொறுத்த மட்டில்.

திரு. மா. சுந்தரதாஸ் : ஆனால், இதுவரையில் இருந்த கன்வென்ஷனை மாற்றியதற்காக எங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரையில் இருந்த கன்வென்ஷனை மாற்றவில்லை. இதுவரையில் இருந்த கன்வென்ஷனை மாற்ற வேண்டும் என்று இப்போது நீங்கள்தான் கோருகிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் எந்த இடத்திலும் உட்கார வைக்கலாம். (குறுக்கீடு) நீங்கள் அப்படிச் சொன்னால் (குறுக்கீடு) திரு. சண்முகம் அவர்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினராகக் கருதப்பட்டு இருப்பாரேயானால், உங்களுக்கெல்லாம் அகர வரிசைப்படி இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல் திரு. சண்முகத்தையும் இங்கே உட்கார வைத்திருப்பேன். ஆனால், அவரை இளம்வழுதிக்குப் பக்கத்திலே வைத்திருப்பதிலிருந்தே அவருக்குக் காங்கிரஸ் கட்சியில் நேரடியான சம்பந்தம் நடைமுறைப் பழக்கத்தில் இல்லை என்பதுதான் அதனுடைய பொருளாகிறது. திரு. எஸ். வி. சண்முகம் (குறுக்கீடுகள்) அவர் பேசட்டும். நான் சொல்லிவிட்டேன். விரிவாகவே சொல்லி விட்டேன். முதலமைச்சர் அவர்களும் தெரிவித்தார்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ். வி. சண்முகம் (குறுக்கீடு) வேறு பிரச்சினையா, சரி.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டுப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன், மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆண்டித்தேவர் ஆகியோர் இரட்டை இலைச் சின்னத்தில் போட்டியிட்டவர்கள். ஆனாலும், அவர்களை நாங்கள் சுதந்திரமாகச் செயல்படவிட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். ** (குறுக்கீடுகள்).

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பற்றது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தம் இல்லாதது. அது அவர்களுடைய உரிமையைப் பாதிக்கிற செயல்.

திரு. செ. கு. தமிழரசன் : இது முற்றிலும் என்னுடைய பிரச்சினை. இது என்னைப் பாதிக்கிற செயல் என்பதால் நான் இதைக் கடுமையாக ஆட்சேபிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கேஒன்றைச் சொன்னார்கள். பெருந்தன்மையோடு கூட்டணிக் கட்சியினரை நடத்துகிற பக்குவம் அவர்களுக்கு இல்லை என்று சொன்னார்கள். இதே பேரவையிலே நான் இரட்டை இலைச் சின்னத்திலே போட்டியிட்டு வந்த பின் நம்முடைய அரசு உள்ளாட்சித் தேர்தலில் இடஒதுக்கீட்டு முறையைக் கொண்டுவந்த போது புரட்சித் தலைவி அவர்களை நான் கடுமையாக எதிர்த்துப் பேசினேன். அப்போதுகூட அவர் என்னைப் பாராட்டினார். உங்களுடைய கொள்கையை நீங்கள் பேசுகிறீர்கள் என்று. அப்படிப்பட்ட இந்த அவையிலே என்னுடைய உரிமையைப் பாதிக்கிற வகையில் ** என்றெல்லாம் கேட்பது சரியல்ல. எனவே, இதை இந்த அவைக் குறிப்பிலே இருந்து நீக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யூகத்தின் அடிப்படையில் **என்று சொல்லியிருப்பது மற்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிக்கிற ஒரு உணர்வை உண்டாக்குகிற செய்தியாக இருக்கிற காரணத்தால் அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. எஸ். வி. சண்முகம். (குறுக்கீடுகள்) க்ளாரிஃபிக்கேஷன் வேண்டாம். He is not yielding.

5. வரவு-செலவுத் திட்டம், 1993—94, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993–94ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி. திரு. எஸ். வி. சண்முகம்.

*திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு நியாயமான உரிமையை எனக்குத் தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்னோடியாக ஒரு சட்டமன்ற உறுப்பின

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.